# PKVK மேங்கோ ஸ்பெஷல்

## (FOLIAR SPRAY FORMULATION FOR MANGO)

## மா இலைவழி ஊட்டச்சத்து

### இலைவழி நுண்ணூட்டச்சத்து தெளித்தலின் அவசியம்:

மாவில் அதிக மகசூல் பெறவும், தரத்தினை மேம்படுத்தவும் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரிக்கவும் சரிவிகித ஊட்டச்சத்து மேலாண்மை மிக முக்கியம். சரிவிகித ஊட்டச்சத்து மேலாண்மையில் நுண்ணூட்டச்சத்துகளின் பங்கு தவிர்க்க முடியாததாக இருந்தாலும் ஒரு சில விவசாயிகளே நுண்ணூட்டச்சத்துக்களை பயன்படுத்தி வருகின்றனர். இதனால் பொதுவாக நுண்ணூட்டச்சத்து குறைபாடுகள் ஒரு பிரச்சினையாக உள்ளது. மானாவாரி சாகுபடியில், மேல் மண் அடுக்கின் தரம் குறைதல், மண் அரிப்பு, பயிர்களில் குறைந்த வேர் வளர்ச்சி போன்ற காரணங்களினால், நுண்ணூட்டச்சத்துக்களை மண்ணில் இட்டு அதன் மூலம் இவற்றின் குறைபாடுகளை சரிசெய்வது கடினம். மேலும் நுண்ணூட்டச்சத்துக்களை மண்ணில் இடும் போது அவற்றின் பயன்பாட்டுத்திறன் 3 முதல் 5 சதவீதம் மட்டுமே இருக்க வாய்ப்புள்ளது. ஆகவே இலைவழி தெளிப்பின் மூலம் எந்த வகையான நுண்ணூட்டக் குறைபாடுகளையும் நிவர்த்தி செய்தல் மிகச்சிறந்த வழியாகும். மா சாகுபடியில் மகசூலை அதிகரிக்கவும், மாவின் தரத்தினை மேம்படுத்தவும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையில் இலைவழி தெளிப்பு ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது.

### பயன்படுத்தும் விதம்:

**10 லிட்டர் தண்ணீருக்கு 50 கிராம் நுண்ணூட்டக்கலவை போதுமானது. இதனுடன் தரமான ஒட்டும்பசை அல்லது 1 ஷாம்பு பாக்கெட்டுடன் 2 எலுமிச்சம்பழச்சாறு கலந்து இலைகள் நன்கு நனையுமாறு தெளிக்க வேண்டும்.**

### தெளிக்கும் தருணம்:

**மா பூக்கும் முன் 2 முறையும் காய்கள் பிடிக்க ஆரம்பித்தவுடன் 2 முறையும் கீழ்கண்டவாறு தெளிக்கவும்:**

| | | |
|---|---|---|
| **முதல் தெளிப்பு** | : | **ஜூன் – ஜூலை மாதம் (உரம் வைக்கும் காலத்தில்)** |
| **இரண்டாம் தெளிப்பு** | : | **அக்டோபர் – நவம்பர் மாதம் (பூ பிடிக்கும் முன்)** |
| **மூன்றாம் தெளிப்பு** | : | **பிப்ரவரி – மார்ச் மாதம் (காய்கள் பட்டாணி அளவு வந்த பிறகு)** |
| **நான்காம் தெளிப்பு** | : | **அறுவடைக்கு ஒரு மாதத்திற்கு முன்** |

### நன்மைகள்:

* நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படுகிறது.
* பூக்கள் மற்றும் காய்கள் எண்ணிக்கை அதிகரிக்கிறது.
* நல்ல நிறத்துடன் அதிக எடைக்கொண்ட தரமான பழங்கள்.
* உரச்செலவு குறைகின்றது.

| மூலப்பொருட்கள் | விகிதம் (%) |
|---|---|
| துத்தநாகம் | 3.0 |
| போரான் | 0.5 |
| மாங்கனீசு | 1.0 |
| இரும்பு | 2.0 |
| தாமிரம் | 0.05 |
| மற்றும் நிரப்பு பொருட்கள் | |

**தொழில் நுட்ப ஆதாரம்**

**இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிறுவனம்**

Indian Institute of Horticulture Research Centre, Bengalore

ஹெசரகட்டா, பெங்களூரு - 560 086